தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-12-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மை பல்கலையில் காய்கறிகளில் மாறிவரும் காலநிலைக்கேற்ப உணவுத் தன்னிறைவு அடைவு கருத்தரங்கம்

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் காய்கறிகளில் மாறிவரும் காலநிலைக்கேற்ப உணவுத் தன்னிறைவு அடைவு என்பது பற்றிய தேசிய கருத்தரங்கு டிசம்பர் மாதம் 6 தேதி முதல் 9ம் தேதி வரை நடைபெறுகிறது.

அதனை முனைவர் என் கே. கிருஷ்ணகுமார், தலைவர், பன்னாட்டு பையோவர்சிடி அவர்கள் குத்து விளக்கு ஏற்றி துவங்கி வைத்தார்.

காய்கறி உற்பத்தியானது மாறிவரும் பருவநிலையினால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அதனை பாதுகாக்கப்படி சூழ்நிலைகளில் வளர்ப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம் எனவும் திருவனந்தபுரம் கிழங்கு வகை ஆராய்ச்சி நிலைய திட்ட இயக்குநர் முனைவர் ஜேம்ஸ் ஜார்ஜ் அவர்கள் கூறினார்.

பூனாவில் உள்ள வெங்காயம் மற்றும் பூண்டு இயக்குநகரத்தின் தலைவர், முனைவர் மேஜர் சிங், அவர்கள் தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குகளில் காணப்படும் அதிக மற்றம் குறைந்த விளைச்சல், விலை வீழ்ச்சி மற்றும் ஏற்றம் ஆகியவற்றை நிலைப்படுத்துதன் அவசியத்தை விளக்கி கூறினார்.

கோவையில் உள்ள ஸ்டேன்ஸ் கம்பெனி, இயக்குநர் திருமதி லஷ்மி நாராயணன் அவர்கள் அங்கக வேளாண்மையில் அவர்கள் உற்பத்தி பற்றி விளக்கிக் கூறினார்.

சென்னையை சேர்ந்த நபார்டு வங்கியின் தலைவர் மற்றும் முதன்மையர் திரு. நாகூர் அலி ஜின்னா அவர்கள் முருங்கை மற்றும் கீரையின் மதிப்புக் கூட்டு ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியதோடு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த விவசாயிகள் உற்பத்தியாளர் சங்கத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கே. இராமசாமி அவர்கள் சிறிய வெங்காய விதை உற்பத்தியானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம்

செய்யப்படுவதாகவும் கூறினார். மேலும் மாணவர்கள் விவசாயிகள் பங்களிப்பு மற்றும் படிக்கும் போதே மாணவர்கள் பணம் ஈட்டும் முறை போன்ற நிகழ்வுகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்லூரிகளிலும் சிறந்த முறையில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்சமயம் சங்கரன்கோவில், பையூர் மற்றும் தேனீ ஆகிய இடங்களில் எலுமிச்சை, மா மற்றும் திராட்சை ஆகியவற்றின் ஆராய்ச்சி நிலையங்களை தொடங்கியுள்ளது என்றும் கூறினார்.

புதுடில்லியில் உள்ள பன்னாட்டு பையோவெர்சிட்டியின் தலைவர் முனைவர் கிருஷ்ணகுமார், அவர்கள் முதியவர்களுக்கான உணவுத்தேவையைப்பற்றிய ஆராய்ச்சியின் அவசியத்தை எடுத்துக்கூறியதோடு, பூச்சி நோய் எதிர்ப்பு மற்றும் வெள்ள எதிர்ப்பு உடைய காய்கறி இரகங்களை உருவாக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார் வணீக ரீதியாக அதிகம் சாகுபடி செய்யாத காய்கறிகளில் இனப் பெருக்க ஆராய்ச்சி செய்து அதனை மேம்படுத்துவதன் அவசியத்தை விளக்கிக்கூறினார்.

மேலும் காய்கறிகள் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

முன்னதாக வேளாண்மைப் பல்கலைக்கழக தோட்டக்கலை முதன்மையர் முனைவர் எம். ஜவஹர்லால் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இறுதியாக விழாவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் திரு த. ஆறுமுகம் அவர்கள் நன்றி உயைாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்